செய்தி வெளியீடு எண் : 478 27/07/2007

## செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் மாவுட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு, 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 மற்றும் 31–ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெற உள்ளது.

30.7.2007 ஆம் நாளன்று நடைபெறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் கூட்டு மாநாட்டில், சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்து, காவல்துறை தலைமை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர்கள், மண்டல காவல்துறைத் தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருடன் கருத்துரையாடல் நடைபெறவுள்ளது.

அதன் தொடர்ச்சியாக 31.7.2007 அன்று நடைபெறும் இரண்டாம் நாள் மாநாட்டில், வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருடன் விவாதிக்கப்படவுள்ளது.

மாண்புமிகு அமைச்சர்கள், அரசுத் துறை செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.